முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை
முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,
முதன்மை சார்பு நீதிபதி.
HMOP. No.111/2024

ம.சா.1
பெயர் கார்த்திகேயன்.
தேதி. 09.04.2025.
சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டது.

எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:–

என் பெயர் கார்த்திகேயன் எனக்கு 36 வயதாகிறது. நான் M.E. படித்துள்ளேன். எனது திருமணம் பெற்றோர்களால் நிச்சயியக்கப்பட்ட திருமணம். நான் தற்போது எங்கு வேலை செய்கிறீர்கள் என்றால் Sucess Tution Centre and TAF I.A.S அக்டமியில் வகுப்பு எடுத்துக்கொண்டு வருகிறேன். இது முழு நேர வேலையாகும். திருமணத்தின்போது ஏழுமலையான் பாலிடெக்னிக்கில் பணிபுரிந்தேன். பின்னர் 4 மாதத்தில் மன்னம்பந்தல் A.V.C.கல்லூரியில் விரிவுரையாளராக வேலை செய்தேன். நான் அரசாங்க வேலைக்கு தயார் செய்வதால் ஒரு அக்டமியில் வேலை செய்து வருகிறேன். 05.12.2022 ல் IMPEC Filters Pvt. Ltd. சென்னையில் டிசைன் இன்ஜினியராக வேலை பார்த்தேன். 06.02.2022 அன்று மேல ஆராயத்தெரு, மாரியம்மன்கோவிலில் எனது திருமணம் நடைபெற்றது. நான் சென்னைக்கு போகும்போது எதிர்மனுதாரரை அழைத்துச் செல்லவில்லை. சென்னையில் திருமுல்லைவாயிலில் தங்கியிருந்தேன்.

எதிர்மனுதாரரும் நானும் ஒரே வீட்டில் மயிலாடுதுறையில் இருந்தேன். எங்களுடன் எனது அம்மா, அப்பா இருந்தார்கள். என் தங்கை கர்ப்பமாக இருந்ததால் அவர் என்னுடன் இருந்தார். திருமணத்தின்போது எத்தனை பவுன் சீர்வரிசை கேட்டீர்கள் என்றால் உங்களால் முடிந்ததை செய்யுங்கள் என்று கூறியிருந்தேன். எதிர்மனுதாரருக்கு 10 பவுனும், எனக்கு 4–3/4 பவுனும் சீராக செய்தார்கள். மேற்படி நகைகள் உங்களிடம் இருக்கிறதா என்றால் இல்லை. 10 பவுன் மட்டும் அவர்கள் வாங்கிக்கொண்டார்கள். எதிர்மனுதாரரிடம் 15.01.2024 அன்று மேற்படி 10 பவுன் நகையை கொடுத்துவிட்டேன். எங்கு வைத்து கொடுத்தீர்கள் என்றால் பேருந்து நிலையத்தில் வைத்து கொடுத்தேன். உங்களுக்கு குழந்தை இருக்கிறதா என்றால் இல்லை. குழந்தை இல்லை என்பதால்

எதிர்மனுதாரரை உங்கள் அம்மாவும், தங்கையும் திட்டினார்களா என்றால் இல்லை. நானும் எதிர்மனுதாரரும் ஓர் ஆண்டாக சேர்ந்து இருக்கவில்லை. அவ்வாறு சேர்ந்து இருக்காததற்கு ஏதேனும்காரணம் உண்டா என்றால் ஆம். நான் சுன்னத் அறுவை சிகிச்சை செய்துகொண்டேன். நண்பர்களின் ஆலோசனையின் பேரில் நான் சுன்னத் அறுவை சிகிச்சை செய்துகொண்டேன்.

நான் மயிலாடுதுறையில் இருக்கும் போதே திருமணம் ஆகி 1 மாதத்திலேயே செய்துகொண்டேன். குழந்தையின்மை சம்பந்தமமாக சென்னை சென்றவுடன் மருத்துவரை அனுகினேன். குழந்தை பிறப்பு சம்பந்தமான அனைத்து பரிசோதனைகளையும் நான் மேற்கொண்டேன். உங்களுக்கு குழந்தை பிறப்பதற்குரிய தகுதி குறைவாக இருப்பதை தெரிந்துகொண்டீர்களா என்றால் ஆம். இதற்காக மேல் சிகிச்சை மேற்கொண்டீர்களா என்றால் ஆம். நான் விவாகரத்து மனு தாக்கல் செய்துள்ளேன். உங்களுக்கு குழந்தை பிறப்பதற்குரிய தகுதி குறைவாக இருப்பதால் அதனை மறைப்பதற்காகதான் எதிர்மனுதாரர் மீது தவறாக குற்றம் சாட்டி மேற்கூரிய மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் தவறு. மேலும் மருத்துவரை நான் அணுகினேன். மேலும் ராஜேஸ்வரி என்ற மருத்துவரை நான் அணுகினோம்., அவர் எந்தவொரு பிரச்சனையும் இல்லை என்றும், இருவரையும் சேர்ந்து இருக்குமாறும் சிகிச்சைக்குரிய சுழற்சி முறையை சரியாக பின்பற்றுமாறும் எங்களுக்கு அறிவுரை வழங்கினார்.

குழந்தை இல்லாத காரணத்தினால் இருவருக்கும் இடையே பிரச்சனை வந்ததா என்றால் எதிர்மனுதாரர் ஒத்துழைக்கவில்லை. குழந்தை பிறப்பு குறைபாடு உள்ளதை ஏன் மனுவில் குறிப்பிடவில்லை என்றால் எங்களுக்குள் ஏற்பட்ட கருத்து வேறுபாடு எதிர்மனுதாரர் தற்கொலை செய்துகொள்வதாக மிரட்டியதால் அதை தொடர்ந்துதான் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. எங்களுக்குள் குழந்தை இல்லாத காரணம் பிரச்சனை கிடையாது. குழந்தை இல்லாததை சுட்டிக்காட்டி உங்கள் அப்பா, அம்மா, தங்கை மற்றும் உறவினர்கள் கேவலமாக எதிர்மனுதாரரை திட்டினார்கள் என்றால் இல்லை. எனக்கு குழந்தை இல்லாததற்கு எதிர்மனுதாரர் தான் காரணம் என்று உங்கள் அம்மா, அப்பா, மற்றும் தங்கை கூறினார்களா என்றால் இல்லை. உங்களுக்கு குழந்தை பிறக்கும் தகுதி இல்லாத காரணத்தினால் ஏற்பட்ட தாழ்வு மனப்பான்மை

மற்றும் காழ்ப்புணர்ச்சி காரணமாகத்தான் இந்த விவாகரத்து மனுவை தாக்கல் செய்தேன் என்று நான் குற்றம்சாட்டுவேன் என்றால் இல்லை. இந்த தாழ்வு மனப்பான்மையை மறைப்பதற்காக பொய்யான காரணங்கள் கூறி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

எதிர்மனுதாரர் சேர்ந்து வாழ விருப்பம் என்றால் ஏற்றுக்கொள்வீர்களா என்றால் இல்லை. அவர் தற்கொலை செய்துகொள்வதாக மிரட்டியதாலும், பைக்கிலிருந்து குதித்ததாலும், 8 மாதகாலமாக கூப்பிட்டு வராததாலும் பெரியோர்கள் முன்னிலையில் சமாதானம் பேசியும் அவர் ஒத்துழைப்பு கொடுக்காததால் இனி சேர்ந்துவாழ வாய்ப்பு இல்லை. மனு தாக்கல் செய்த பிறகு சமரசதீர்வுக்காக இந்த வழக்கு மக்கள் நீதிமன்றத்திற்கு எதிர்மனுதாரர் வேண்டுகோளின் பெயரில் அனுப்பி வைக்கப்பட்டது என்றால் சரிதான். எதிர்மனுதாரருக்கு சேர்ந்து வாழ விருப்பம் இருந்ததால் தான் சமரச தீர்வுக்கு வேண்டுகோள் கொடுத்தார் என்றால், நான் முயற்சி செய்தபோது அவர் எந்தவித ஒத்துழைப்பும் அளிக்கவில்லை. சமரச தீர்வு பேசும்பொழுதும் குறையாகத்தான் கூறிக்கொண்டு இருந்தார்கள். அவர்கள் சமாதானமாக பேசக்கூடிய நிலையில் இல்லை. அதனால் தான் இனியும் இருவரும் சேர்ந்து வாழ வாய்ப்பு இல்லை என முடிவுசெய்தோம்.

எனக்கு குழந்தையின்மை என்ற குறைபாடு எனது பெற்றோர்களுக்கு தெரியுமா என்றால் அவர்களுக்கு தெரியாது. ஒரு மருத்துவர் விந்து உற்பத்தி குறைபாடு உள்ளது என்று கூறினார். மற்றொரு மருத்துவர் எந்தவித குறைபாடும் இல்லை என்றும், இருவரும் சேர்ந்து இருந்தால் சரியாகிவிடும் என்றும் கூறினார். என்னிடம் உள்ள குறையை மறைத்து எதிர்மனுதாரரிடம் மட்டுமே முழுக்குறையும் இருப்பதாகக்கூறி அவரை சமுதாயத்திலும், உங்கள் உறவினர்களிடமும் கேவலப்படுத்தினீர்கள் என்றால் இல்லை.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.